**எஹலியகொட பிரதேச சபை**
**இரத்தினபுரி மாவட்டம்**

---

## 01. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 ஜுன் 02 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 ஆகஸ்ட் 07 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஜுன் 30 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக்கூற்றுக்களில் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு எஹலியகொட பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்காக கூட்டுத்தொகை ரூபா. 41,820 தொகை செலவுகளுக்கான கடன்கொடுத்தோர்களை இனங்கண்டு கணக்கீடு செய்திருக்காமையால் மீளாய்வாண்டிற்காக செலவுகள் மற்றும் கடன்கொடுத்தோர் அதே தொகையால் குறைவாக காட்டப்பட்டுள்ளது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான இறுதி ஆறு மாதங்கள் தொடர்பாக ரூபா 18,780 இற்காக முத்திரை வரி உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட வேண்டும் எனினும் முத்திரை வரி பேரேட்டுக் கணக்கில் அப் பெறுமதி ரூபா 188,132 தொகை என கணக்கீடு செய்திருந்தமையினால் மீளாய்வாண்டிற்கான நடைமுறை பொறுப்புக்கள் ரூபா 169,350 இனால் மிகையாக காட்டப்பட்டிருந்தது.

(இ)(i) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு மக்கள் வங்கியின் எஹலியகொட கிளையின் இலக்கம் 085-1-001-70000674 கொண்ட நடைமுறைக் கணக்கின் மீதி வங்கிக் கணக்கிணக்கக் கூற்றின் பிரகாரம் ரூபா. 4,373,940 தொகையாக காணப்பட்டதுடன் மீளாய்வாண்டிற்கான நிதி நிலைமைக்கூற்றில் அம் மீதி ரூபா 4,387,551 தொகை என காட்டப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் நிதி நிலைமை பற்றிய கூற்றில் சமநிலைத் தன்மை கணக்காய்வில் சிக்கலாகக் காணப்பட்டது.

(ii) மேற்கூறிய கணக்கில் மீளாய்வாண்டு திசெம்பர் மாத வங்கிக் கணக்கிணக்கக்கூற்றின் காட்டியிருந்த வங்கிக்கூற்றின் படி மீதி ரூபா. 7,132,651 தொகை எனினும் ரூபா. 7,086,575 என காட்டப்பட்டிருந்தது.

(ஈ) கெடஹத்த பல்கரும கட்டிடத்தை நிர்மானிப்பதற்கு உள்நாட்டு கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்தில் இருந்து பெற்றிருந்த கடன் தொகை ரூபா. 12,962,804 தொகை

ஆக காணப்பட்ட போதிலும் அந்த கடன் தவணைப்பணம் அல்லது வட்டித்தொகை ஏதும் மீளாய்வாண்டின் போது கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. எனினும், மீளாய்வாண்டிற்கான தவணைப் பணத்தின் மொத்தப் பெறுமதி ரூபா. 1,073,886 தொகை எனினும், 38 ஆம் இலக்க நாட்குறிப்பின் மூலம் செலுத்த வேண்டிய தவணைப்பணம் என ரூபா 1,180,000 தொகை என மீளாய்வாண்டிற்கான செலவுகளுடன் சீராக்கல் செய்திருந்தமையால் ஆண்டிற்கான மிகை ரூபா. 106,114 இனால் குறைவாக காட்டப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு மருத்து வகை இருப்பு மீதி ரூபா. 283,187 தொகை என பொருட்கள் கணிப்பீட்டு அறிக்கை மூலம் உறுதிப்படுத்திய போதிலும் அம்மீதியின் மருந்துவகை இருப்பு கணக்கின் இறுதி மீதி என குறிப்பிடப்பட்ட பின்னர் கணக்கில் காணப்படும் ரூபா. 799,868 இற்கான வித்தியாசம் மருந்து வகை வழங்குதல் என நாட்குறிப்பு இலக்கம் 23 இன் மூலம் கணக்கிற்கு சீராக்கல் செய்யப்பட்டிருந்தது. எனினும் மருந்துவகை இருப்பு பதிவேட்டின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான இருப்புக்கள் வினியோகித்தல் எதனையும் உறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 9 கணக்கு விடயங்கள் தொடர்பாக மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதிகள் மற்றும் துணைப பதிவேடுகளின் பிரகாரம் மீதிகளின் இடையே ரூபா. 3,135,357 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டில் 22 செலவு தலைப்புகள் தொடர்பாக வாக்குப்படி பேரேடு மற்றும் பொழிப்பு செலவு பதிவேட்டுடன் இணக்கஞ் செய்யும் போது ரூபா 1,713,875 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டன.

### 1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

ஊழியர் கடன் பதிவேட்டின் பிரகாரம் சேவையை விட்டுச் சென்றுள்ள அல்லது இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள ஆகிய காரணங்களின் 09 உத்தியோத்தர்கள் மற்றும் ஊழியர்களிடம் ரூபா. 63,583 தொகைக்கான நிலுவை கடன் மீதியொன்று அறவிடப்படவேண்டிக் காணப்பட்டது.

### 1.3.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாண ஏற்பாடுகளுக்கு மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
| --- | --- |
| (அ) இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | |
| (i) நிதிப் பிரமாணம் 371 | வழங்கப்பட்ட முற்பணங்கள் குறிப்பிட்ட வருடத்தின் திசெம்பர் 31 திகதி அளவில் தீர்க்கப்பட வேண்டுமெனினும் 1995 ஆண்டு முதல் தீர்ககப்படாத முற்பணங்கள் என ரூபா. 2,467,259 இற்கான மீதியொன்று காணப்பட்டது. |
| (ii) நிதிப் பிரமாணம் 396 (ஈ) | 2011 ஆண்டு முதல் மீளாய்வாண்டு ஏப்ரல் வரை காலங்கடந்த கூட்டுத்தொகை ரூபா. 652,116 தொகைக்கான 138 காசோலைகள் தொடர்பாக குறிப்பிட்ட பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை. |
| (iii) நிதிப் பிரமாணம் 570 மற்றும் 571 | பல வருட காலமாக காணப்படும் ரூபா. 2,327,550 தொகை பெறுமதியுடைய காலம் கடந்த வைப்புக்கள் தொடர்பாக குறிப்பிட்ட பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) உள்ளூராட்சி ஆணையாளர் சுற்றறிக்கை<br>2009 மார்ச் 09 திகதி ப.ப.கொ./2009 ஆம் இலக்க சுற்றறிக்கை | குறைந்த பட்சம் 05 வருடங்களுக்கு ஒரு முறையேனும் பெறுமதி மதிப்பீடு செய்யபபட்ட வீதவரி திருத்தப்பட வேண்டும் எனினும் சபைக்கு சொந்தமான அநேக கடைகளின் கட்டணம் நாளதுவரை ஆக்கப்பட்டிருக்கவில்லை. |

## 02. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினை விஞ்சிய வருமானம் ரூபா 6,789,168 ஆகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 3,067,093 ஆகும்.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி செயற்பாட்டு மிகைரூபா 3,722,075 இனால் அதிகரித்திருந்ததுடன், அது முன்னைய ஆண்டை விட 121 சதவீத அதிகரிப்பு ஒன்று என அவதானிக்கப்பட்டது. இதற்கு முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் மீண்டுவரும்

வருமானங்களில் அதிகரித்தல் மற்றும் மீண்டுவரும் செலவுகளில் குறைவடைந்தல் என்பன முக்கியமாக பாதித்திருந்தது.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டிற்காக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம் உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | மதிப்பீட்டு | உள்ளவாறான | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| வீத வரி மற்றும் வரி | 6,981 | 8,321 | 10,919 |
| வாடகை | 4,264 | 4,867 | 1,506 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 469 | 383 | - |
| ஏனைய வருமானங்கள் | 33,895 | 43,898 | 33,914 |

### 2.3.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை

மீளாய்வாண்டின் மதிப்பீட்டு வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானத்துடன் இணக்கஞ் செய்யும் போது அனுமதிப்பத்திரக் கட்டணம் மற்றும் எழுத்தாணை மற்றும் தண்டம் ஆகிய வருமான விடயங்களில் சேகரிக்கப்பட்ட வருமானம் பாதீட்டு தொகையை விட முறையே 22 சதவீதம் மற்றும் 5 சதவீதத்திற்கு குறைவடைதல் காட்டுகின்றது.

### 2.3.3 வீதவரி

கணக்காய்வு திகதி ஆகிய 2015 நவம்பர் 20 திகதி வரையும் நிலுவை வீதவரி தொடர்பாக அறிக்கையொன்று தயாரித்திருக்காததுடன், அத்திகதியில் உள்ளவாறு 2014 ஆண்டிற்கு மேலும் பெற வேண்டிய மொத்த நிலுவை தொகையாக ரூபா 6,915,973 தொகையும், 2015 ஆண்டு தொடர்பாக சிட்டையிடப்பட்ட வருமானத்தில் மேலும் கிடைக்க வேண்டிய நிலுவைத் தொகையாக ரூபா. 3,356,811 தொகையும் காணப்பட்டது. அவை 2015 ஆண்டிற்காக சிட்டை இடப்பட்ட வருமானத்தில் 52 சதவீதம் என அவதானிக்கப்பட்டது.

### 2.3.4 குத்தகை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) எஹலியகொட வாராந்த சந்தையை மாதாந்தம் ரூபா. 68,420 இற்கான குத்தகை தொகை என்ற அடிப்படையில் 2015 ஆண்டிற்காக குத்தகை கொடுக்கப்பட்டிருந்ததுடன் அந்த குத்தகையை அறவீடு செய்யும் விடயம் 2015 ஜுன் மாதம் முதல் நகர அபிவிருத்தியின் காரணமாக செயற்படாது காணப்பட்டது. அத்துடன் கணக்காய்வு திகதியான 2015 நவம்பர் 20 திகதி வரை வருமானம் ஏதும் உழைத்திருக்கவில்லை.

(ஆ) கெடஹத்த வாராந்த சந்தை 2015 ஜனவரி 01 முதல் 2015 திசெம்பர் 31 வரையான காலப்பகுதிக்கு மாதாந்தம் ரூபா. 17,925 தொகைக்கு குத்தகைக்கு கொடுக்கப்பட்டிருந்ததுடன், 2015 செப்டம்பர் 30 திகதி அளவில் 03 மாத காலத்திற்கு ரூபா. 58,247 நிலுவை குத்தகை காணப்பட்டது. தனிநபர் ஒருவரினால் 2010 ஆண்டின் போது குத்தகை காணி உறுதி ஒன்றின் மூலம் இச் சபைக்கு ஒரு வருடம் வாராந்த சந்தை நடத்துவதற்காக ஒப்படைத்திருந்ததுடன் கணக்காய்வு திகதியான 2015 நவம்பர் 20 திகதி வரை அக் காணியின் குத்தகை உறுதியின் காலத்தை நீடிப்பதற்கு அல்லது உரிமையாளருக்கு சட்டரீதியாக ஒப்படைத்து காணியின் தெளிவான உரிமையின் ஒப்படைத்தல் நடைபெற்றிருக்கவில்லை.

(இ) எஹலியகொட மாட்டிறைச்சிக் கடை 2011 ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை ஒரே கேள்விதாரருக்கு தொடர்ந்து கேள்வி வழங்கப்பட்டிருந்துடன் அக்கால வீச்சில் கேள்வி தொகையில் அதிகரிப்பு மிகவும் குறைந்த அளவாக ரூபா. 2,200 மாத்திரமே என அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் எஹலியகொட மாட்டிறைச்சிக் கடை கேள்வி அழைக்கும் செயற்பாடு முறைசார் விதமாக நடைபெறவில்லை என திறந்த போட்டி நிலைமையினை ஏற்படுத்தி கேள்வி அழைக்கப்படாமையால் சபைக்கு பெற்றுக்கொள்ளக்கூடிய பாரிய வருமானம் ஒன்றினை இழந்திருந்தது என கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(ஈ) சபையின் அதிகாரப் பிரதேசத்தில் பகிரங்க ஏல விற்பனவு மூலம் விற்பனை செய்யப்படும் காணியின் அளவில் 10 சதவீதம் பொது வேலைகளுக்காக சபைக்கு காணி உறுதி ஒன்றின் மூலம் வழங்கப்பட வேண்டுமெனினும் இதற்கு முரணாக திவுரும்பிடிய நரியமுல்லஹேன காணியின் விற்பனை செய்த காணிப்பகுதி 476.11 பர்சஸ்களாகும். எனினும் 25 பர்சஸ் காணித் துண்டு ஒன்று மாத்திரம் சபைக்கு உரித்தாக்கப்பட்டிருந்தது. இதற்கான ஆரம்ப காணி உறுதி கணக்காய்விற்குச் சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை. அந்த காணித் துண்டு காணி உறுதி ஒன்றின் மூலம் சாட்டப்பட்டதற்கான சான்றுகளும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. காணிப் பகுதியின் எல்லைகள் கூட இணங்கான முடியாத விதமாக காணி காடுகள் வளர்ந்து காணப்பட்டது. பாதுகாப்பு வேலி நிர்மாணிக்கப்பட்டு அல்லது சபைக்கு உரித்தானது என அறிவித்தல் பலகை ஒன்று பொறுத்தப்பட்டு இருக்கவில்லை. காணி சதுப்பு நிலத்துடன் கூடிய பள்ளமாக காணப்படும் பயன்தரு விடயமொன்றிற்கு பயன்படுத்த முடியாதவாறான காணிப்பகுதி ஒன்றாகும். அதன் பிரகாரம் சட்டரீதியாக உரிய காணி பகுதியொன்று மற்றும் பயன்படுத்தக்கூடிய காணித்துண்டு ஒன்றினை ஒதுக்கி கொள்வதற்கு சபைக்கு முடியாதிருந்தது. அது தவிர காணி ஏல விற்பனை செய்யப்பட்டு 05 வருடங்கள் கடந்திருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியாகிய 2015 நவம்பர் 20 திகதி வரை இக் காணிகளுக்கு நீர் வசதிகள் பெற்றுக் கொடுத்திருக்கவில்லை.

(உ) சபைக்கு சொந்தமான வர்த்தகக் கடைத்தொகுதிகளின் கடைகளில் இருந்து 2012 ஜனவரி முதல் 2015 செம்டம்பர் வரை ரூபா. 43,650 இற்காக நிலுவை தொகையொன்று அறவிடப்படவேண்டியிருந்தது.

**2.3.5 அனுமதிப்பத்திரக் கட்டணம்**

(அ) பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள கைத்தொழில் வரி வியாபார வரி மற்றும் வர்த்தக அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடப்பட வேண்டிய வியாபாரங்களை இனங்காண்பதற்காக வருடாந்த கணிப்பீடு ஒன்று கணக்காய்வுத் திகதியாகிய 2015 நவம்பர் 20 ஆந் திகதி வரை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. வியாபார வகைகளின் படி சேகரிக்கும் வருமானத்தை அடிப்படையாக வைத்து வருமானப் பதிவேடு பேணப்பட்டிருந்தது.

(ஆ) வர்த்தக அனுமதிப்பத்திரம் மற்றும் கைத்தொழில் வரியின் கீழ் மீளாய்வாண்டிற்காக விதித்துள்ளவாறு வரிகள் மீளாய்வாண்டு ஏப்ரல் 01 திகதிக்கு முன்னர் சபைக்கு செலுத்தப்பட வேண்டும் எனினும் அவ்வாறு நடைபெறாத 15 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதுடன் ஏப்ரல் 01 திகதியின் பின்னர் அனுமதிப்பத்திரக் கட்டணம் மற்றும் குறிப்பிட்ட வரி செலுத்துவதை புறக்கணிக்கும் நிறுவனங்களுக்கு எதிராக 2014 திசெம்பர் 19 ஆந் திகதிய 1894 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் சட்டரீதியான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

**2.3.6 ஏனைய வருமானங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணக்காய்வுத் திகதியாகிய 2015 நவம்பர் 20 திகதி வரை வரி செலுத்துவோரிடம் நீண்டகாலமாக காணப்படும் ரூபா 53,179 இற்கான நிலுவை ஏக்கர் வரி மீதியொன்று அறவிடப்பட வேண்டியிருந்தது.

(ஆ) சபைக்குச் சொந்தமான பொது மலசலகூடம் மூன்று மாத காலங்களுக்காக வாடகைக்கு கொடுக்கப்படுவதுடன், 2015 செப்தெம்பர் 30 திகதியின் பின்னர வாடகை ஒப்பந்தங்களை புதுப்பித்து வாடகைக்கு கொடுத்திருக்கவில்லை. அத்துடன் சபைக்கு கிடைக்க வேண்டிய வருமானம் ஒன்றினை இழந்துள்ளது. மேலும் நிலுவை வாடகை மற்றும் நிலுவை நீர்க் கட்டணமாக அறவிடப்பட வேண்டிய ரூபா 17,917 இற்கான நிலுவைத் தொகை மற்றும் 2015 ஜுன் 01 முதல் 2015 செப்தெம்பர் 30 திகதி வரை காலப் பகுதிக்காக ரூபா 13,950 இற்கான நிலுவைத் தொகை கணக்காய்வுத் திகதியாகிய 2015 நவம்பர் 20 திகதி வரை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**2.3.7 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

(அ) அவிசாவளை காணிப் பதிவாளர் அலுவலகத்தில் இருந்து 2013 ஆண்டு முதல் திசெம்பர் வரை பெற வேண்டிய முத்திரைக் கட்டணத்தை இனங்கண்டு பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன் 2014 ஜுலை முதல் திசெம்பர் வரை பெற வேண்டிய நிலுவை முத்திரைக் கட்டணம் ரூபா 7,238,054 தொகை கிடைத்திருக்கவில்லை. மேலும், பெப்ரவரி முதல் அக்டோபர் வரை பெறவேண்டிய நிலுவைத் தொகைக் கட்டணத்தை இனங்காண்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. கொழும்பு மாவட்ட காணிப் பதிவாளர் அலுவலகத்தில் இருந்து 2014 ஜனவரி முதல் 2015 அக்தோபர் வரையும், இரத்தினபுரி மாவட்ட காணிப் பதிவாளர் அலுவலகத்தில் இருந்து 2014 செப்தெம்பர் முதல் 2015 அக்தோபர் வரையும், ஹொரண காணிப் பதிவாளர் அலுவலகத்தில் இருந்து 2014 ஜனவரி, மார்ச், ஏப்ரல், மே, ஆகஸ்ட் மற்றும் நவம்பர் ஆகிய மாதங்களுக்காகவும், 2015 ஜனவரி முதல் அக்தோபர் வரையும் பெற வேண்டிய முத்திரைக் கட்டணத்தை இனங்கண்டு அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும் 2014 பெப்ரவரி, ஜுன், ஜுலை, செப்தெம்பர், அக்தோபர், திசெம்பர் மாதங்களுக்காக பெற வேண்டிய ரூபா 258,020 முத்திரைக் கட்டணம் கணக்காய்வுத் திகதியாகிய 2015 நவம்பர் 20 திகதி வரையும் அறவீடு செய்திருக்கவில்லை.

(ஆ) அவிசாவாளை நீதிவான் நீதிமன்றில் இருந்து 2014 ஏப்ரல் முதல் திசெம்பர் வரையும், 2015 ஜனவரி முதல் 2015 அக்தோபர் வரையும் பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணமும், இரத்தினபுரி நீதிவான் நீதிமன்றில் இருந்து 2012, 2013 மற்றும் 2014

ஆண்டுகள் தொடர்பாகவும் 2015 ஜனவரி முதல் அக்தோபர் வரையும் பெற வேண்டிய நீதி மன்றத் தண்டப் பணத்தையும் இனங்கண்டு அறவீடு செய்திருக்கவில்லை.

## 03. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவத் திறமையின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) எஹலியகொட நகரில் அபிவிருத்திச் செயற்திட்டங்கள் செயற்படுத்துவதன் கீழ் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் செயற்படுத்தப்பட்டு உடைத்து அகற்றப்பட்ட கட்டிடப் பகுதிகள் அகற்றுவதற்காக சபையின் அங்கீகாரமின்றி 2013 ஆண்டின் போது ரூபா 900,000 தொகை முற்பணம் சபை நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதியாகிய 2015 நவம்பர் 20 திகதி வரை நகர அபிவிருத்தி அதிகார சபையின் மூலம் இச் செயற்திட்டத்தின் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்காமையினால் செலுத்தப்பட்ட முற்பணத் தொகை சபை நிதியத்தில் மேலதிக செலவுப் பொறுப்பு ஒன்றாக மாறியிருந்தது.

(ஆ) சபையில் கடமையாற்றி ஓய்வு பெற்றுள்ள மற்றும் இடமாற்றம் பெற்றுள்ள 04 உத்தியோகத்தர்களின் ஊழியர் பிணையாக தடுத்து வைத்திருந்த ரூபா 49,273 இற்கான தொகையொன்று உரிய உத்தியோகத்தர்களுக்கு விடுவிப்பதற்காக கணக்காய்வுத் திகதியாகிய 2015 நவம்பர் 20 திகதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) தலைவரின் உத்தியோகபூர்வ வாசஸ்தல தொலைபேசிக்கான நிலுவைத் தொகை ரூபா 18,825 இற்கான கணக்காய்வுத் திகதியாகிய 2015 நவம்பர் 20 திகதி வரை செலுத்தியிருக்கவில்லை.

(ஈ) சபையின் அதிகாரப் பிரதேசத்தில் காணப்படும் மயானங்களிடையே 22 மயானங்கள் இணங்காணப்பட்டிருந்த போதிலும் அவற்றினது அளவை விடயங்கள் மேற்கொள்ளப்பட்டு சபைக்கு ஒழுங்கு முறைப்படி உரித்தாக்கப்பட்டு ஆவணப்படுத்தப்பட வேண்டியிருந்தது.

(உ) கணக்காய்வுத் திகதியாகிய 2015 நவம்பர் 20 திகதி வரையும் ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 108,385 இற்கான நிலுவையினை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஊ) 2011 ஜூன் மற்றும் 2012 ஜனவரி மாதங்களுக்கு வங்கி இணக்கக் கூற்றுக்களில் காணப்பட்ட வித்தியாசங்கள் முறையே ரூபா 2,300 தொகை மற்றும் ரூபா 12,140 தொகையான வித்தியாசங்களை இனங்கண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(எ) 2006 ஆண்டு முதல் காணப்பட்ட 10 வழக்குகள் தொடர்பாக 2015 ஜூன் 30 திகதி வரை சட்டவறிஞர் கட்டணமாக ரூபா 273,950 இற்கான தொகையொன்று சபை நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியாகிய 2015 நவம்பர் 20 திகதி வரை தொடர்ந்தும் தீர்க்கப்படாமல் காணப்பட்டது.

3.2 **ஒப்பந்த நிருவாகம்**

சப்ரகமுவ மாகாண சபை முதலமைச்சின் நிதி ஏற்பாடுகளின் கீழ் 2009 ஆண்டின் போது ரூபா 5,379,264 தொகைக்கான மதிப்பீடு ஒன்றினை அடிப்படையாகக் கொண்டு பிரதேச சபையினால் அமுல் நடத்தப்பட்ட திவுரும்பிட்டிய நீர் வழங்கள் செயற்திட்டத்திற்காக கணக்காய்வுத் திகதியாகிய 2015 நவம்பர் 20 திகதிய ரூபா 6,740,431 இற்கான செலவு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அச் செயற்திட்டத்தில் குறிக்கோள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை என பௌதீகப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது. நீர் களஞ்சியப்படுத்தல் தொட்டி, கிணறு, இயந்திர அறை பல வருட காங்கள் கடந்திருந்த போதிலும், அந்த ஆதனங்களின் பாதுகாப்பிற்காக பாதுகாப்பு வேலியொன்று நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன் நெருங்கிய காடுகள் வளர்ந்து செடிகொடிகள் வளர்ந்து பாதுகாப்பற்ற நிலையில் காணப்பட்டது. மேலும் நீர் களஞ்சியப்படுத்தல் தொட்டி உரிய காணி சட்டரீதியாக சபைக்கு உரித்தாக்குவதற்கு கணக்காய்வுத் திகதியாகிய 2015 நவம்பர் 20 திகதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

3.3 **செயற்பாட்டுத் திறமையின்மை**

3.3.1 **முறைசாராக் கொடுக்கல் வாங்கல்கள்**

2005 ஜுன் 08 திகதிய 1396/18 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியின் அறிவித்தலுக்கு முரணாக சபை கூட்டங்களில் பங்குபற்றாத மற்றும் மருத்துவ அறிக்கைகள் சமர்ப்பித்திருக்காத இரண்டு அங்கத்தவர்களுக்கு ரூபா 40,000 தொகையான சபை அமர்வுப் படி செலுத்தப்பட்டிருந்தது.

3.4 **சொத்துக்கள் முகாமைத்துவம்**

**விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்**

(i) சப்ரகமுவ மாகாண சபை அலுவலகத்தில் இருந்து மற்றும் உள்ளூராட்சி அமைச்சில் இருந்து 2013 மற்றும் 2014 ஆண்டுகளின் போது நன்கொடையாக கிடைத்திருந்த இலக்கம் RD – 5104 மற்றும் இலக்கம் RD – 6461 கொண்ட 02 சார்க்கடை பவுஸர்கள் அவை கிடைத்த நாள் முதல் பயன்படுத்தப்படாமல் விளைவற்று காணப்பட்டதுடன் இலக்கம் LF – 4825 கொண்ட கப் வண்டி மற்றும் இலக்கம் QB – 4780 கொண்ட முச்சக்கர வண்டியும் ஓட்ட நிலையின்றி விளைவற்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக முறையான நடவடிக்கைகள் இன்றி கணக்காய்வுத் திகதியாகிய 2015 நவம்பர் 20 திகதி வரை எடுத்திருக்கவில்லை.

(ii) கெடஹத்த பல்கரும கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டு பல வருடங்கள் கழிந்திருந்ததுடன், ரூபா 1,625,866 தொகை பெறுமதியுடைய 14 வாயு சீராக்கல் இயந்திரங்கள் 2014 திசெம்பர் 06 திகதி வரை பொருத்தப்பட்டிருந்தன. கணக்காய்வுத் திகதி வரையும் அக் கட்டிடம் விளைவற்றுக் காணப்பட்டதுடன் கட்டிடத்தில் சுற்றுச்சூழல் பகுதி அசுத்தமடைந்து காணப்பட்டது. நுழை பாதையிலுள்ள அங்கீகாரமற்ற தற்காலிக கடைகளை அகற்றி நுழைபாதை அமைக்கப்பட்டிருக்கவில்லை. கடந்த ஆண்டுகளுக்கான கணக்காய்வு ஐய வினாக்களிலும் இந்த நிலைமை தொடர்ந்தும் சுட்டிக் காட்டிய போதிலும், சபைக்கு சொந்தமான கட்டிடம் எதுவித தேவைக்கும் பயன்படுத்தப்படாமல் காணப்படுகின்றதாக சபைக் கிடைக்கக் கூடிய வருமான வழி ஒன்றினை இழந்துள்ளது எனவும் மற்றும் அக் கட்டிடத்தின் தொடர்ந்தும் உளமை ஆபத்தான நிலையில் உள்ளது என கணக்காய்வின் போது மேலும் அவதானிக்கப்பட்டது.

(iii) உள்ளூராட்சி அமைச்சின் மூலம் 2015 பெப்ரவரி 06 திகதி இக் கணக்கு கிடைத்திருந்த மோட்டார் கிரேடர் இயந்திரம் கணக்காய்வுத் திகதியாகிய 2015 நவம்பர் 20 திகதி வரை சபையின் தேவைகளுக்கு பொருந்தாமை மற்றும் சாரதி ஒருவர் இன்மை ஆகிய காரணங்களினால் எதுவித தேவைக்கும் பயன்படுத்தப்படாமல் பழைய சபை கட்டிடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

**3.5 செயற்திட்டங்களின் தாமதம்**

சபையினால் 7 செயற்திட்டங்கள் தொடர்பாக ரூபா 955,374 தொகைக்கான முற்பணம் வழங்கப்பட்டிருந்ததுடன், கணக்காய்வுத் திகதியாகிய 2015 நவம்பர் 20 திகதி வரையும் முற்பணம் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. அதே போல் நிர்மாண வேலைகள் செயற்படுத்தப்பட்டனவா போன்ற தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

**3.6 திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கொஹிலதெனிய வத்த சேதனப் பசளை தளத்தினை நிர்மாணிக்கும் நிர்மாண வேலையினை 2015 நவம்பர் 20 ஆம் திகதி பௌதீகப் பரிசோதனை செய்ததுடன் சுமார் 02 ஏக்கர் நிலப் பரப்பில் அமைக்கப்பட்டுள்ள கட்டிடம் காடுகள் வளர்ந்து காணப்பட்டது. பேருவானவத்தை சேதனப்பசளை தளத்தில் இருந்து பாதி அளவு தயாரித்து கொண்டுவரும் குப்பை உரச் செயற்பாட்டில் ஈடுபடுத்தாமல் முறையாக வகைப்படுத்தப்படாமல் பொலிதீனும் கலந்த நிலையில் கட்டிடங்கள் இடையிடையே குவிக்கப்பட்டு காணப்பட்டன. மேலும், கட்டத்தில் திறந்த பகுதியில் குப்பைகள் குவிக்கப்பட்டு காணப்பட்டதுடன், அவற்றில் காணப்படும் பொலிதீன், டின்கள், பிளாஸ்டிக் ஆகிய பொருட்கள் என்பன திறந்த தரையில் தீ வைக்கப்படுவதுடன் டெங்கு ஒழிப்பு செயற்திட்டத்தின் கீழ் ஒரு வருட காலமாக சேகரிக்கப்பட்ட டின்கள், பிளாஸ்டிக் போத்தல்கள் ஆகிய பொருட்கள் தொடர்பாக செயற்பாடுள் ஒன்றும் மேற்கொள்ளப்படாமல் வளவில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது. சபையின் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் ஒருவரினால் மேற்பார்வை செய்யப்படுவதாக உறுதிப்படுத்தப்படவில்லை. அத்துடன் சம்பவக் குறிப்பேடு ஒன்றும் பேணப்பட்டிருக்கவில்லை. இச் செயற்திட்டம் ஒரு கிராமத்தில் செயற்படுத்தப்படுவதினால் மேற்கூறிய நிலைமைகளின் கீழ் பொது மக்களில் சிறந்த சுகாதார நிலைமை ஒன்றிற்கு பாதிப்பு ஏற்பட முடியுமென இது தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும் என கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(ஆ) பேருவானவத்த சேதனப் பசளை தளம் நிர்மாணித்தல் தொடர்பாக மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் ஏற்பாடுகளின் கீழ் எஹலியகொட பிரதேச சபையின் தலைவர் மற்றும் ஒப்பந்தக்காரரிடையே ரூபா 4,034,056 இற்கான தொகைக்கு 2015 ஏப்ரல் 20 திகதி உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் சுமார் ஒரு வருடம் அளவில் பேருவானவத்தையின் திறந்த தரைப் பகுதியில் குப்பைகள் குவிக்கப்பட்டிருந்தன. சேதனப் பசளை செயற்பாடு உரிய முறைப்படி நடைபெறவில்லை என தொழிநுட்ப உத்தியோகத்தருடன் 2015 நவம்பர் 19 திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது. மேலும், நிர்மாணிக்கப்படும் கட்டிடத்தின் நிர்மாணவேலை மந்த நிலையில் நடைபெறுவதாக அவதானிக்கப்பட்டது.

## 04. நல்லாளுகையும் கணக்களிப் பொறுப்பும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 23 செலவு விடயங்கள் தொடர்பாக ரூபா 2,021,000 இற்கான மொத்த நிதி ஏற்பாடுகள் எதுவித தேவைக்கும் பயன்படுத்தியிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது 39 செலவுத் தலைப்புகளுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த நிதியேற்பாடுகள் 62 செலவுத் தலைப்புகளுக்கு ரூபா 11,542,513 தொகை மாற்றப்பட்டிருந்ததுடன் அதற்கான சபை தீர்மானம் அல்லது குழு விதப்புரை பெற்றிருக்கவில்லை.

### 4.2 வருடாந்த பெறுகைகள் திட்டம்

மீளாய்வாண்டிற்காக வருடாந்த பெறுகைகள் திட்டம் தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரம் செயற்படுத்தியிருக்கவில்லை.

### 4.3 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வு அலகு ஒன்று நிறுவப்பட்டு அதற்கு தேவையான வசதிகள் வழங்கி செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 4.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அமுல் நடத்துதல்

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நிறுவி செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 05. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிருவாகம்
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஈ) ஒப்பந்த நிருவாகம்
(உ) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்